
# விடுதலைக்குரல் ★

ரல் 1. இல 6. கார்த்திகை 84.





# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

## PEOPLES LIBERATION ORGANIZATION OF TAMILEELAM

ஐரோப்பியவெளியீடு

P. O. BOX 91 · D 6953 GUNDELSHEIM

# இந்திரா காந்தி

ஆசியப்பிராந்தியத்தின் சமகாலத்தலைமைகளுள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பரம விரோதியாக இந்தியாவையும், இந்து சமுத்திரப் பிரதேசத்தையும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்த, தனது வரலாற்றுக் கடமையை செவ்வனே செய்த இந்தியப்பிரதமர் இந்திராகாந்தி, படுபிற்போக்கு வாதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றார். சமீப காலங்களில் இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் அமெரிக்காவின் தலையீடுகள் அம்பலமானதும், அமெரிக்காவானது இராணுவ சர்வாதிகார பாகிஸ்தானின் தலைமைக்கு நவீன இராணுவ தளபாடங்களை பரிசளித்து இந்தியாவிற்கு எதிரான இராணுவ ஆக்கிரமிப்பிற்கு தூண்டுதலாக இருந்ததும், இந்தியக்குடியரசு ஒரு பெரிய நெருக்கடியை எதிர் நோக்குவதை வெளிப்படுத்தியது. இதனை சம்பந்தில் பிரதமர் இந்திரா "இந்தியாவின் அடிவானில் யுத்த மேகங்கள் திரண்டிருப்பதனால் நாடு பெரும்

ஆபத்தை எதிர்நோக்கி உள்ளது" என்று குறிப்பிட்டிருந்தார். மத்திய கிழக்கில் நிலைநான் ந்த அமெரிக்கா, இந்து சமுத்திரத்தை நோக்கி மெல்ல நகர்கையில், இந்தியாவின் உறுதியான ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப் பாடும், பிலிப்பைன்சில் அமெரிக்க கைக்கூலி மார்க்கோசின் அந்திமகாலமும், தமிழீழ விடுதலைப் போராளிகள் அனைவரதும் ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளும் இந்து சமுத் திர பிரதேசத்தில், அமெரிக்காவின் அதிகாரத் தை நிலைநிறுத்துவதற்கு பெரும் சவாலாக இருக்கின்றன. இந்த நிலையில் வழக்கம்போல இந்தியாவின் அரசியலில் ஏதோ விதத்திலாவது குழப்பங்களை ஏற்படுத்தி அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன், வெள்ளைமாளிகை சதிகாரர்கள் பாரதப்பிரதமர் இந்திராவின் கொலையின் பின்னணியில் இடம் பெறுகின்றார் கள்.

ஒரு தலைசிறந்த தலைமை பறிபோனதற்காக வருந்தும் உலக முற்போக்கு சக்திகளுடனும், இன்றைய கால கட்டங்களில் இந்தியக் குடியரசின் சிறப்பான தலைமையை இழந்த துயரில் மூழ்கிய குடியரசின்

மக்களுடனும், இலங்கைத் தமிழர் பிரச்சனையில் அனுதாபம் காட்டிய இந்தியப்பிரதமரின் மறைவால் துயருறும் தமிழ்மக்களுடனும் "விடுதலைக்குரல்" மறைந்த பாரதப்பிரதமர் திருமதி, இந்திராகாந்திக்கு தனது அஞ்சலியை செலுத்துகின்றது.

இந்தியக் குடியரசின் புதிய பிரதமர் ராஜீவ் காந்தியை வாழ்த்தி வரவேற்பதுடன் தனது பதவிக்காலத்தில் முழுமனித குலத்தின் வளர்ச்சிக்கும் தனது வரலாற்றுக் கடமையை செவ்வனே செய்ய வேண்டுகின்றோம். வரலாற்றுச் சக்கரத்தின் அசைவுகள் இதை உலகிற்கு உணர்த்தும்.



இந்தியக் குடியரசின்
புதிய பிரதமர்
**ராஜீவ் காந்தி**

# தமிழீழப் போராட்டம் எந்த மட்டத்தில்....

பரபரப்பூட்டும் நடவடிக்கைகள் சற்று ஓய்ந்திருக்கின்றன. கற்பனை கதைகளை கேட்பது சற்று அரிதாக இருக்கின்றது. தமிழீழ விடுதலைப்போராட்டத்தில், சமீபகாலங்களில் மேற்கொள்ளப்பட்ட விடுதலைப்போராட்ட இராணுவ நடவடிக்கைகளின் பலாபலன்கள் கசப்பாகவிருக்கின்றன. தமிழ் மக்களுக்கு இராணுவ வெற்றிகள் எதுவும் கிடைக்கவில்லை, மாறாக பாரிய இழப்புகளேஏற்பட்டன. வல்வெட்டித்துறை, மன்னார், சுன்னாகம், பருத்தித்துறை, நெல்லியடி, ஊர்காவற்துறை இன்னும் பல கிராமங்களில் அரச இராணுவம் மேற்கொண்ட அழிவு நடவடிக்கைகள் பழைய கதைகளாகிவிட்டன. ஆனால் தமிழீழபோராட்டம் அங்கொன்றும், இங்கொன்றுமாக அரச படைகள் மீது தாக்குதல் தொடுப்பதால் மட்டும் வெல்லப்பட முடியாதது என்பது மீண்டும் ஒரு முறை நிருபணமானது மட்டுமல்ல, பேரழிவுகளில் விடுதலைப் போராட்டத்தை சீரழித்து விடுமென்பதும் தெளிவாகி இருக்கின்றது.

1983ல் அரசபடை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு பதிலடியாக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளிலிருந்து, இம்முறை தாக்குதலுக்கு அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் முற்றிலும் வேறுபாடானது. யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் 13 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டபோது நாடுதழுவியதான திட்டமிட்ட இனக்கலவரத்தை முன்னின்று நடத்திய அரசாங்கம் இம்முறை எங்கெங்கே தாக்குதல்கள் நடைபெற்றனவோ அந்தந்த இடங்களில் கைதுசெய்தல், தீவைத்தல், சுட்டுப் பொசுக்குதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. தமிழ்மக்களுக்கெதிரான போர்த்தந்திரங்களை தலைகீழாக

மாற்றியுள்ளது. உலக ஏகாதிபத்தியமான அமெரிக்காவின் செல்லப்பிள்ளையான, இஸ்ரவேலின் உளவறியும் பிரிவு மோசாட்டின் அறிவுரைகளும், பயிற்சிகளும் பூரணமாகப் பின்பற்றப்பட்டு அரசபடைகள் தமிழீழத்தை மீண்டும் ஒரு முறை சுடுகாடாக்கின என்பது தெளிவாகின்றன. ஆனால் தாக்குதல் நடத்தியவர்களின் போர்த்தந்திரங்களில் ஒருவித மாற்றமும் தெரியவில்லை.

சிங்கள இனவாத அரசு உலக ஏகாதிபத்தியத்துடனும் அதனது பங்குதாரர்களினதும் பொருளாதார இராணுவ அரசியல் உதவிகளைப் பெற்று தன்னை இராணுவ ரீதியில் பலப்படுத்திக்கொண்டளவிற்கு, தமிழ்மக்கள் சார்பில் போரிட்டவர்கள் செய்துகொள்ளவில்லை என்பதும் எதிரியின் பலமும் பின்னணியில் இருக்கும் சக்திகளின் பலமும், பூரணமாக கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை என்பதும் இன்று தெளிவாகின்றன.

தமிழ்மக்களின் விடுதலைக்கு நடத்தப்படுகின்றது என்று சொல்லப்பட்ட இப்போராட்டத்தில், தமிழ்மக்கள் எவ்வளவு தூரம் தங்கள் பங்கைச் செலுத்தினார்கள் என்பதனை நோக்குகையில், போராட்டத்திற்கும் தங்களுக்கும் ஒருவித சம்பந்தமும் இல்லை என்ற ரீதியில் நடந்து கொண்டிருக்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது. தாக்குதல்கள் நடத்தப்பட்ட கிராமங்களிலிருந்தும், அயல்கிராமங்களிலிருந்தும் நிராயுதபாணிகளான மக்கள் கிலிகொண்டு ஓடி ஒழிந்தார்கள். பள்ளிக் கூடங்களிலும், தேவாலயங்களிலும் சொந்த மண்ணிலேயே அகதிகளாய் புகலிடம் கோரினார்கள். அத்துடன் மேற்கு பெர்லினில் நூற்றுக்கணக்காக நாளாந்தம் வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றார்கள். நாட்டை விட்டு பெருந்தொகையான

ஆண்களின் வெளியேற்றம் சமூக வாழ்க்கையில் ஏற்படுத்தும் பாதிப்புடன், யாருக்காக யாரால் போராட்டம் நடத்தப்படுகின்றது என்ற குழப்பமும் ஏற்படுகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் அரசியல்மயப்படுத்தப்படாத தமிழ்மக்கள் விடுதலை இயக்கங்களால் இவ்வளவுதான் செய்ய முடியுமோ? என்று இயக்கங்களின் மீது நம்பிக்கை இழந்து, மீண்டும் தமிழர் விடுதலைக்கூட்டணியினரின் செப்பு வார்த்தைக்கு தலையசைப்பதுடன், வெளிநாட்டுத்தலையீட்டையும், பங்களாதேஸ் பாணியிலான விடுதலையும் நம்பக் கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன.

இந்நிலையில் இடைக்கால தாக்குதல்களைத் தவிர்த்து பரந்துபட்ட மக்கள் போராட்டத்தை தங்கள் போர்த்தந்திரமாக கொண்டுள்ள இயக்கங்களின் செயற்பாடுகள் கவனிக்கப்பட வேண்டியுள்ளது. மக்களிடையே அமைப்பு வேலைகளைச் செய்து பரந்துபட்ட மக்கள் போராட்டத்திற்கு அணிதிரட்டவும், இனவாத ஏகாதிபத்திய அரசிற்கு எதிரானதும் தமிழ்மக்களுக்கு சார்பானதுமான ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளுடன் தமிழ்மக்களுக்கு தொடர்புகளை ஏற்படுத்தி, போராட்ட காலத்தில் பொருளாதார, இராணுவ உதவிகளை நிபந்தனைகள் இன்றி பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபடவும் வேண்டிய கட்டாயமான நிலைமையுள்ளன. இந்த விடுதலை தயாரிப்புகளை செய்து முடிப்பதற்கு, இடைக்கால தாக்குதல் நிறுத்திவைக்கப்பட வேண்டியது அத்தியாவசியமாகின்றது. ஐக்கிய முன்னணி ஒன்றை அமைப்பதன் மூலமே இது சாத்தியமாகும் என்பது புரட்சிகர விடுதலைப் போராட்டங்களின் வரலாறாகும்.

ஆனால் ஐக்கிய முன்னணி ஒன்று அமையுமா என்பது, தெளிவாகவில்லை. T.E.L.O, E.R.O.S, E.P.R.L.F ஆகிய மூன்று இயக்கங்களினதும் கூட்டமைப்பு இத்தாக்குதல்களை நிறுத்தி வைப்பதற்கு பயன்படாமல் போனது எந்த வகையிலும் தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கு சாதகமானதல்ல. இக்கூட்டமைப்பில் பொது வேலைத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டு மற்றைய விடுதலை இயக்கங்களுடனும், ஒரு ஐக்கிய முன்னணிக்குள் வருவதால் மட்டுமே இக்கூட்டமைப்பு பலமடையக்கூடியதாகும். இக்காலகட்டத்தில் ஐக்கிய முன்னணியை வலியுறுத்தாதவர்களாக உண்மையாக உழைக்காத விடுதலை இயக்கங்கள் தமிழ் மக்களுக்கு பெரும் துரோகம் இழைத்தவர்களாவதுடன், தமிழ் மக்களால் நிராகரிக்கப்படவும் வேண்டியவர்களாகின்றார்கள்.

இவ்விடுதலை இயக்கங்கள் ஒரு ஐக்கிய முன்னணிக்குள் வர முடியாத பட்சத்தில் தமிழ்மக்கள் முற்றுமுழுதாக அழிந்து போவதை அனுமதிக்க முடியாது. இச்சந்தர்ப்பத்தில் மக்கள் அமைப்புகளை தமிழீழமெங்கும் கட்டி எழுப்பி, வெளிநாட்டுத் தொடர்புகளைப்பலப்படுத்தி தமிழீழ விடுதலைப்போரை முன்னெடுக்கவேண்டிய வரலாற்றுக் கடமையையும் தவிர்க்க முடியாதது. தமிழீழத்தில் எல்லைகளிலிருந்து, ஆக்கிரமிப்பு இராணுவம் அகற்றப்பட வேண்டியது அத்தியாவசியமாகின்றது.

# ஏங்கள் கனவு முதலாளிகள்.

எங்கள் கனவு முதலாளிகள் வரிந்து கட்டி போராடிப் புறப்படும் இன்னுமொரு பிரச்சனை சோசலிச சமுதாய அமைப்பு முறையில் பாராளுமன்ற முறை ஒழிக்கப்பட்டு சர்வாதிகாரம் அமுல்படுத்தபடும் என்பதே. தற்போதிருக்கும் முதலாளித்துவ நாடாளுமன்ற முறையை "பன்றித் தொழுவம்" என்று கூறினார் தத்துவவித்தகன் கார்ல் மாக்ஸ். முதலாளித்துவ நாடாளுமன்ற முறையின் மெய்யான சாரப்பொருள் யார் நாடாளுமன்றத்தின் மூலம் மக்களை சில ஆண்டுகளுக்கு அடக்கி ஒடுக்குவது என்பதைத் தீர்மானிப்பதே. தேர்தல் காலங்களில் வேட்பாளர்கள் வீடு வீடாய் படியேறி மக்களின் காலில் விழுந்து, சாராயத்தைப்பருக்கி தேர்தலில் வெற்றியின் பின்னர் கொழும்புக்கு சென்றால் அந்தியேட்டி, ஆண்டுத்திவசம், கோயில் திருவிழா இப்படியான விசேட வைபவங்களுக்கு உண்டுக்குதித்திரும்பும் பாராளுமன்ற அங்கத்தவர்கள் பலரை தமிழ்மக்கள் பாராளுமன்ற அரசியல் வரலாற்றில் கண்டிருக்கின்றார்கள்.


விலைவாசி ஏற்றத்தாலோ, வேலையில்லாத் திண்டாட்டத்தாலோ அல்லது ஒரு இடமாற்றத்திற்காகவோ M.P.யின் கையாட்களைப்பிடித்து, M.P.யைச் சந்தித்து கதைக்க முயன்றால், உலக வங்கி கடன் கொடுக்கின்ற வேலைக்கோட்டா மாவட்ட அடிப்படையில் தான் அரசாங்கம் கொடுக்குது. உனக்கு உது ஒன்றும் விளங்காது, பேந்து வா என்று வெருட்டியடிக்கும் மக்களின் பிரதிநிதி, வீட்டுக் கோட்டாவிற்கும், சீமெந்து கோட்டாவிற்கும், வேறும் பல முதலாளிகளின் பலவித தேவைகளுக்கும், தமிழ்க் கோரிக்கையை செத்தையில் செருகிவிட்டு மந்திரிமாரின் அலுவலகங்களில் தவம் கிடந்ததையும் தமிழ்மக்கள் மறந்திருக்கமாட்டார்கள். ஒவ்வொரு முறை ஆட்சிமாறும் போதும் மக்களின் பிரச்சினைகள் முன்பிருந்ததைவிட அதிகரித்தும், ஆட்சியிலிருப்பவர்கள் புதிய முகங்களாகவோ, அல்லது நீண்ட காலங்களுக்கு காணாத முகங்களாகவோ தென்படுவதைவிட வேறொன்றும் தென்படவில்லை.

முதலாளித்துவ பாராளுமன்ற முறையைக் கடைப் பிடிக்கும் மிகவும் ஜனநாயகமான

முதலாளித்துவ குடியரசுகளான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி இன்னும் பல நாடுகளிலும் கூட அரசுக்குரிய மெய்யான வேலை திரைக்குப் பின்னால் நடத்தப்படுகிறது. இலாக்காக்களும், அமைச்சகச் செயலகங்களும், படைத்தலைமையகங்களும் இதை நடத்துகின்றன. மக்களின் எண்ணங்கள் அங்கே மருந்துக்கும் கவனிக்கப்படுவதில்லை. மக்களின் பிரதிநிதிகள் எனப்படுவோர், நாடாளுமன்றத்தில் வாய்ப் பேச்சு பேசி மக்களை முற்று முழுதாக ஏமாற்றுவதையே தொழிலாகக் கொண்டுள்ளார்கள். ஜேர்மனியில் DIE ZEIT என்ற வலதுசாரி பத்திரிகையின் தலைமை ஆசிரியர் கூறுகின்றார், "கடந்த பங்குனி 83ல் 56% மான மேற்கு ஜேர்மன் மக்கள் பொதுத் தேர்தலின் போது C.D.U, F.D.P என்ற இரண்டு கட்சிகளுக்கும் வாக்களித்தனர். இந்த இரண்டு கட்சிகளும் அமெரிக்க ஏவுகணைகளை, மேற்கு ஜெர்மனியில் நிறுவுவதை வன்மையாக ஆதரித்தன. ஆனால் ஐப்பசி 83 ல் நடந்த அபிப்பிராய வாக்கெடுப்புகள் பலவற்றில் 60%, 70% ற்கும் இடைப்பட்ட மக்கள் அமெரிக்க ஏவுகணைகள்

நிறுவுவதை எதிர்க்கின்றனர். தேர்தலின் போது மக்கள் பாணும் பட்டனும் போன்ற சிறிய விடயங்களில் தான் கவனம் செலுத்தினரே ஒழிய அணு ஆயுதங்களைப்பற்றி கவனம் செலுத்தவில்லை." இன்று கிட்டத்தட்ட மேற்கு ஜேர்மனியின் முழுச்சனத்தொகையும் அணு ஆயுதங்களை நிறுவுவதை வன்மையாக எதிர்த்தாலும், பாராளுமன்றத்தில் மக்களின் பிரதிநிதிகள் கலாட்டா சண்டித்தனங்களில் இறங்கினாலும், PERSHING II என்ற ஏவுகணைகள் ஜேர்மனியில் நிலைபெற்று விட்டன. மனித குலத்தின் அழிவிற்கே நாடாளுமன்ற முறை மூலம் வழி தேடப்படுகின்றது.

அணு ஆயுத எதிர்ப்பு ஊர்வலமொன்று.
மேற்கு ஜேர்மனியின் STUTTGART நகரில்.



இந்த நாடாளுமன்ற முறை ஒழிப்பதென்பது, பிரதிநிதித்துவ உறுப்புக்களையும், தேர்தலையும் விட்டொழிப்பதாகாது. பிரதிநிதித்துவ உறுப்புக்கள் வாய்ச்சவாடல் மன்றங்களாய் இருப்பதை அவற்றை, "செயலாற்றும்" உறுப்புக்களாக்க வேண்டுமென்பதே இதன் பொருள். சோசலிச சமுதாய அமைப்பில் "கம்யூனானது" நாடாளுமன்ற உறுப்பாயில்லாமல் செயலாற்றும் உறுப்பாய் ஒருங்கே சட்டமன்றமாகவும், நிர்வாகக் குழுவாகவும் செயல்படும் உறுப்பாய் திட்டமிடப்படுகின்றது. முதலாளித்துவ அமைப்பில் இருப்பதைப் போன்று சட்டமியற்றுவதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் சம்பந்தமில்லாமல் இருப்பதில்லை. ஆளும் வர்க்கமாக ஒழுங்கமைந்த பாட்டாளிவர்க்கம் காலப் போக்கில் வர்க்க ஆதிக்கத்தை அகற்றி மக்களுக்கே அந்த அதிகாரங்களையும் வழங்கும். ஒரு குடியரசிற்குரிய குறிப்பிட்ட வடிவமே "கம்யூன்" ஆகும்.

முதலாளிவர்க்கத்தின் தலைமையில் மக்களை அடக்கி யொடுக்கும் படைகளை அகற்றி விட்டு அதற்கு பதிலாக ஆயுதம் ஏந்திய மக்களை தோற்றுவிப்பதே கம்யூனுடைய

முதலாவது அரசாங்கமாகும். மக்களுக்கு செய்யும் சேவையின் அடிப்படையிலேயே கமியூனில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள். ஒரு முதலாளியானவன் தனது தொழிலுக்குத் தேவையான திறமையான உழியர்களைத் தெரிவு செய்வதைப் போல் கம்யூனை வலுப் பெற்ற மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்கின் றார்கள். இப்பிரதிநிதியானவர் மக்களுக்கு செய்யும் சேவையிலிருந்து தவறுவாரானால் உடனடியாக விமர்சிக்கப்பட்டு, பதவியில் இருந்து இறக்கப்படுகின்றார். எங்களுடைய பாராளுமன்ற அமைப்பு முறையிலேயோ, பதவி விருப்பதற்கு செய்யப்படும் திருகுதாளங்கள் அனைவரும் அறிந்ததே. தேர்தல் காலங்களில் காண்டீபம் கையிலேந்தி "சிங்களவரை" அழித்தொழிக்க புறப்படுவதும் தேர்தல் முடிந்த பின்னர், அமெரிக்க கடற்படைக் கப்பலில் விருந்துண்ணுவதும், சிங்களப்பாரா ளுமன்ற வாதிகள் அவிழும் கூட நான் அரிசி தாறன் என்பதும், தமிழரின் பிரச்சினையை தான் தீர்த்து விடுவேன் என்பதும், பதவிக்கு வந்ததும் மழை பெய்யாததிற்கும் தமிழன்தான் காரணம் என்று கூறி நிரந்தரமாக பதவியிலிருக்க

முயல்வதும், மக்கள் பலி பேய்களாவதும் காணக்கூடியதாகின்றது.

பாராளுமன்றக் கூட்டங்களின் போது எதிர்க்கட்சி உறுப்பினரை பேச விடாது கூக்குரலிடுவதும், சண்டித்தனங்கள் செய்வதும், பிரதிநிதிகள் ஒருவரோடு ஒருவர் நாகரீகமற்ற முறையில், மூன்றாந்தரப் பாஷைகளை பரிமாறிக் கொள்வதும், பாராளுமன்றத்திலிருந்து கதிரையுடன் தூக்கி எறியப்படுவதும் சர்வ சாதாரணம். ஆளும் கட்சியை பதவியிலிருந்து இறக்குவதற்கு அந்தக்கட்சியின் உறுப்பினர்களை எதிர்க்கட்சியினர் விலை கொடுத்து வாங்குவது, வெருட்டுவது, கடத்துவது என்பன சர்வ சாதாரணமானது.

ஆனால் கம்யூனை கருத்துச் சுதந்திரமும், விவாதச் சுதந்திரமும் ஏமாற்று வித்தைகளாகச் சீரழிந்து விடாத உறுப்புக்களைத் தோற்றுவிக்கின்றது. எப்படி எனில் நாடாளுமன்றத்தினர் தாமே வேலை செய்யவும், தாம் இயற்றும் சட்டங்களை தாமே செயல்படுத்தவும் உண்மையில் சாதிக்கப்பெற்ற பலன்களைத் தாமே சோதித்துப்பார்க்கவும், தம்மைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கு நேரடியாகத் தாமே பொறுப்புக் கூறவும் வேண்டியதாகிறது.

முதலாளித்துவ பாராளுமன்ற அமைப்பில் அங்கத்தவர்களின் அதிகாரம் எல்லை மீறியது. பதவிக்காலங்களில், கோடுகளில் கிரிமினல் வழக்கில் கொலைக்குற்றவாளிகளை விடுதலை செய்ய, கிரிமினல் சட்டத்தை ஒரு கலக்கு கலக்கிவிடுவது தொடங்கி, மச்சான், மாமன், மருமகன் பெயரில் வியாபாரங்கள் திறப்பதில் தொடர்ந்து, பிள்ளைகளை வெளிநாடுகளில் படிக்க அனுப்புவதில் முடியும்.

ஆனால் கம்யூன்களில் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் ஒருவித சுத்துமாத்தும் செய்யாமல், சன்மானங்கள், கௌரவம், விசேட சலுகைகள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளாமல் சாதாரண தொழிலாளருக்குரிய சம்பளங்களைப் பெற்று மக்களுக்கு சேவை செய்வதை மேய நோக்காகக் கொண்டுள்ளார்கள்.

சமீபத்தில் மொஸ்கோவிலிருந்து, லெனின் கிராட்டிற்கு காரில் பயணம் செய்த NEWS-WEEK சஞ்சிகையின் மொஸ்கோ நிருபர் ROBERT. B. CULLEN தனது பயணத்தில் சந்தித்த ரஷ்யர்களைப்பற்றி எழுதியிருக்கின்றார். (NEWS WEEK OCTOBER 22, 1984) ஒரு கிராமத்தினூடாக அவர் பயணம் செய்கையில் ஒரு 26 வயது இளைஞன் (NIKOLAI STEPANOV)

அவரது காரை மறித்து, அவருடன் பயணம் செய்ய விரும்பினேன். பயணத்தின் போது தனது கார் பழுதாகி திருத்துவதற்கு விட்டிருப்பதாகவும், நான் அக்கம்யூனின் நிறைவேற்றுக் குழுத் தலைவர் என்றும் கூறினேன், என்றும் எழுதுகின்றார். எங்களது அங்கத்தவர்கள் சொந்தக் காரையும் விட அரசாங்கத்தின் ஜீப் வண்டியையும் வைத்துக் கொண்டிருந்தும் எத்தனை முதலாளிகள் அவர்களுக்கு கார் வாங்கித் தர தயாராக இருக்கின்றார்கள்.

இவை முதலாளிகளே முதலாளித்துவ நாடாளுமன்ற முறை நிச்சயம் ஒழிக்கப்பட வேண்டியது. அனைத்து அதிகாரங்களும், மக்களுக்கே வழங்கப்படுவதும் தவிர்க்கப்பட முடியாதது.

எதிர்பக்கத்தில் பிரசுரமாகியிருப்பது, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின், ஒரு பத்திரிகை அறிக்கையாகும்.

# பத்திரிகை அறிக்கை. 17

கடந்த திங்கட்கிழமை 17.09.1984 அன்று உலகத் தமிழர் மன்ற தொடக்க விழாவில் பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், பங்களாதேசவிடுதலைப்போராட்டத்தில் இந்திய அரசு நேரடியாகத் தலையிட்டது போன்று, இலங்கைத் தமிழர்களின் பிரச்சனைக்குத் தீர்வுகான இந்திய அரசு நேரடியாகத் தலையிடவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பொறுப்புணர்வின்றி திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் பேசிய இத்தகைய பேச்சை தமிழீழமக்கள் விடுதலைக்கழகம் வன்மையாக கண்டிக்கின்றது.

அடிப்படையில் இலங்கைத்தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்த உரிமையிழந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர், 'இலங்கையில் இந்திய இராணுவத்தலையீடு' குறித்துப்பேச உரிமையற்றவர்கள். 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் 'சோசலிசத் தமிழீழம்' அமைப்போம் என்று மக்களுக்கு வாக்குறுதி அளித்து மக்கள் ஆதரவைப் பெற்று பாராளுமன்றம் சென்ற கூட்டணியினர் இன்றுவரை தமிழ் மக்களின் பிரச்சனைக்குத் தீர்வு 'நிரந்தர முடிவான சுதந்திர இறமையுள்ள சோசலிசத் தமிழீழம்' எனும் மக்களின் முடிவை பூர்த்தி செய்ய எந்தவொரு நடைமுறை செயலிலும் ஈடுபடவில்லை. மாறுக கடந்த ஆறு வருடமாக ஜெயவர்த்தனவின் சிங்கள இனவாத பாராளுமன்றத்தில் ஒட்டிக்கொண்டிருந்தார்கள். தமிழீழம் எனும் கோரிக்கையைக் கைவிட்டால் ஒழிய தாம் பேச்சு வார்த்தைக்குத் தயார் இல்லை எனக்கூறிய, இனவாத ஜெயவர்த்தன அரசுடன் தமிழீழம் தவிர்ந்த ஒரு தீர்வு தேடிப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்ட போதே இவர்கள் தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்தவர்கள் ஆகின்றார்கள். 1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழ் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியைக் கைவிட்டுவிட்டார்கள். அன்றிலிருந்து இன்றுவரை சுதந்திரப்

போராட்டத்தில், எந்த விதப்பங்கேட்காமலும், வெறும் பார்வையாளர்களாகவும், செய்திதாள்களுக்கு அறிக்கைகள் விடுபவர்களாகவுமே செயற்பட்டு வந்திருக்கின்றார்கள். சிங்களப் பேரினவாதத்தின் பிடியில் அன்றாடம் அல்லலுறும் தமிழ் மக்களின் துயர் துடைக்க தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வழி நடத்த தவறியவர்களாகவே தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இருக்கின்றனர்.

ஜெயவர்தனாவின் அரசு ஏட்பட்டது முதலே இந்த நெருக்கடியான கால கட்டத்தில் தமிழர் விடுதலை கூட்டணி எந்த ஒரு போராட்டத்தையும் தலைமை தாங்கி நடத்தவில்லை. இதனால் இவர்களுக்கு சிறை செல்வது, சித்திரவதைப்படுவது, உயிரிழப்பது போன்ற தேவைகளே ஏற்படவில்லை. இப்போது மட்டுமல்ல கடந்த காலத்திலும்கூட முதலாளித்துவச்சார்பான போக்கினால் தமிழ் மக்களின் நலன்களுக்காக தீவிர போராட்டங்களை மேற்கொள்ளாமல், அவர்களை அரசியல் ரீதியாக ஏமாற்றியே வந்திருக்கின்றார்கள். நாடாளுமன்ற பதவி பறிபோனதில் பின் இவர்களில் பலர் அரசியலில் இருந்தே விலகிக் கொண்டதுடன், இவர்களின் இன்றைய முழுநேர தொழில் வர்த்தகமாகவே இருக்கின்றது.

எனவேதான் தேசிய இனப்பிரச்சனைக்கு நிரந்தரதீர்வு காணக்கூடிய சோசலிசத்திசையில் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் நாம் தமிழீழ மக்களைப் பிரதிநிதிப்படுத்துவதோ போராட்டம் பற்றி பேசுவதோ, இன்று நாடாளுமன்ற பதவிகளையும் இழந்து விட்ட தமிழர் விடுதலைக்கூட்டணியினர்க்கு அருகதையோ, அதிகாரமோ இல்லையென அறுதியிட்டுக் கூறுகின்றோம்.

பல்வேறு இன்னல்களின் மத்தியில் தமிழீழத்தை தவிர்ந்த எந்தவொரு முடிவும் எமது மக்களின் பிரச்சனைக்குத் தீர்வைக் கொடுக்காது, என்ற உண்மையின் அடிப்படையில்

மக்களோடு ஒன்றிணைந்த ஆயுதப் போராட்டத்தின் மூலமே எமது விடுதலையைப் பெற்றெடுக்க முடியுமென்ற நிச்சயமான முடிவில் சிறிலங்கா சிங்கள இனவாத அரசையும், அதன் கூலிப்படைகளையும், எதிர்த்து போராடிவரும் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகமும், ஆயுதம் தாங்கிய விடுதலைப்போராட்டத்தை ஏற்றுக் கொண்ட தோழமை இயக்கங்களுமே எமது மக்களையும், விடுதலைப் போராட்டத்தையும் பிரதிநிதித்துவபடுத்த உரிமையுடையவர்களாகின்றார்கள்.

சிங்கள பெரும் தேசிய இனவாதத்திற்கு எதிரான, நியாயமான எமது விடுதலைப்போராட்டத்திற்கு, உலகிலுள்ள முற்போக்கு அரசுகளினதும், ஸ்தாபனங்களினதும், உதவியை நாடி நிற்கின்றோம். குறிப்பாக தமிழ் நாட்டு மக்களினதும், இந்திய மக்களினதும் ஆதரவை நாடி நிற்கின்றோம். தமிழ்நாட்டு அரசும், இந்திய அரசும் எமது மக்களின் துயர் துடைக்க எமக்கு உதவ வேண்டும். இது எமது மக்களின் விடுதலைப்போராட்டம். இதை நாமே வழி நடத்திச் செல்லவேண்டும். எமது மக்களின் இன்னல்களை களைந்தெறிய எமது நியாயமான கோரிக்கையை மதித்து உதவிடல் வேண்டும். எமது மக்களின் விடுதலையை வென்றெடுக்கும் உளத்திடமும் பலமும் எம்மிடம் இருக்கின்றது.

அ.அமிர்தலிங்கத்தின் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஒரு 'நிழல் அரசையும்' அமைக்கவிருப்பதாக அறிகின்றோம். தமிழீழவிடுதலைக்கான எவ்வித வேலைத்திட்டங்களோ, போராட்ட நிகழ்த்திட்டங்களோ, அல்லது அரசியற் தந்திராபயமோ அற்ற இவர்கள் அமைக்கப் போகும் இந்த நிழல் அரசாங்கத்தால், எவ்வித பயனோ, முன்போதலோ ஏற்படபோவதில்லை என்பதோடு ஏகாதிபத்திய வாதிகளின்

கைக்கூலிகள் இடம் பெற்றுள்ள தமிழர் விடுதலைக்கூட்டணியினர் இந்த மாயத் தோற்றமான 'நிழல் அரசாங்கத்தால்' தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் முற்போக்கு அம்சங்களே காட்டிக்கொடுக்கப்படும் என்பதனாலும் இவர்களின் இச்செயலை நாம் வன்மையாகக் கண்டித்து ஒதுக்குகின்றோம்.

கடந்த திங்கட்கிழமை கூட்டப்பெற்ற உலகத்தமிழர் மன்றம் வெறும் சுயநல நோக்கங்கொண்ட தனி நபர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழகத் தலைவர்களோ, தமிழீழ விடுதலை இயக்கங்களோ பங்கு பெறாத இத்தகைய தனிநபர்களின் 'உலகத் தமிழர் மன்றம்' வெறும் வியாபார நோக்கம் கொண்டதே. இது உலகில் வாழும் தமிழர்களின் பிரச்சனைக்கு உதவிட முடியாத ஒரு வியாபார அமைப்பாகும். தமிழீழ மக்களின் எத்தகைய உணர்வையும் வெளிப்படுத்த உரிமை அற்ற கூட்டணியினரும், பிற தனி மனிதர்களும் பங்கேற்றுள்ள இவ்வுலகத் தமிழ் மன்றம் வெளி நாட்டிலுள்ள முதலாளித்துவ வாதிகளின் வியாபார நோக்கிற்கே ஏற்படுத்தப்பட்டுள்ளது. பரந்த உலகில் வாழும் தமிழர்களின் நிலையை வெளிப்படுத்த இச்சிறுபான்மை முதாலித்துவ வாதிகட்கு எவ்விதத்திலும் உரிமை இல்லை என தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் வன்மையாகக்கண்டிக்கின்றது. மேலும் தனிப்பட்ட ரீதியாக மிகத் தொகையான பணத்தை லண்டன் வாழ் தமிழ் மக்களிடம் இருந்து தமிழீழ போராட்டத்திற்குச் சேர்ந்தவர்களும், தனிப்பட்ட ரீதியாக பல்வேறு நாடுகளில் தமிழீழப் பிரச்சனையைக் காட்டி பணம் சேகரித்தவர்களும் இவ்வுலக மன்றத்தில் இருப்பது மிகவும் சந்தேகத்திற்கு

யூடமானது. மேலும் பொது மக்களின் பணமும் விரயமாக்கப் படலாம் எனத் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் இத் தனி நபர்களை இனம் காணும்படி கேட்டுக் கொள்கின்றது.

---

# வெளிநாட்டுத்தமிழர்கள்.

இனவாத அரசின் அடக்கு முறைகளிலிருந்து விடுபட்டு வெளி நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் விடுதலைப்போரா ட்டத்தில் பெரும் பங்கேற்ற வேண்டியவர்களாயுள்ளார்கள். சமீபகாலங்களில் நாட்டை விட்டு ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் வெளியேறி மேற்கத்திய நாடுகளில் வாழ முயற்சி எடுக்கும் வேளையில், எந்தவொரு வெளி நாடும் நீண்ட காலத்திற்கு எங்களுக்கு உறைவிடம் தரக்கூடிய நிலையில் இல்லை என்பதை உணர்ந்து செயற்படவேண்டும். மேற்க த்திய நாடுகளின் தீர்க்க முடியாத பொருளாதாரப் பிரச்சனைக்கு, காலத்திற்கு காலம் வெளி நாட்டவர்க ளை நாட்டை விட்டு வெளியேற்றுவதும் ஒரு தீர்வு காணும் முயற்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது வெளிநா ட்டவர்களை வெளியேற்றுவதற்கான முயற்சிகளில் முனனெப் பொழுதும் இல்லாத அளவில், அரசாங்கங்கள் நடவடிக்கை எடுக்கின்றன என்பதை அனுபவரீதியாக உணரக்கூடியதாக இருக்கின்றது.

இந்நிலையில் இங்கே வரும் தமிழர்கள் நீண்ட காலத்திற்கு இங்கு தங்க முடியாததை கருத்திற்கொண்டு தமிழீழப்போராட்டத்திற்கு பெரும் பங்களிப்பை செய்ய வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். தமிழீழத்தில் வதை

இயக்கங்களைப் பொறுத்தளவில் கொண்டிருப்பது ஆரோக்கியமான அரசியல் நடவடிக்கையல்ல மேலெழுந்தவாரியாக யாருக்காவது உதவி செய்தால் கடமை முடிந்தது என்ற ரீதியில் செயற்படுவது தவிர்க்கப்பட்டு சரியான முடிவெடுப்பது விடுதலைப் போராட்டத்தின் பங்களிப்பிற்கு அத்தியாவசியமாகின்றது. அத்துடன் மாற்று விடுதலை இயக்கங்களை சேர்ந்தோரை பகைவராக கருதி நடவடிக்கையெடுப்பதும் வேறுபட்ட கருத்துக்களை கொண்டிருக்கின்றார்கள் என்பதற்காக பயமுறுத்தல், கைகலப்பில் ஈடுபடுதல், எச்சரிக்கை செய்தல் போன்றவை போராட்ட முன்னெடுப்புக்களல்ல, அவை சண்டித்தனங்கள்.

இவற்றை எல்லாம் தவிர்த்து தமிழீழவிடுதலைப் போராட்டத்தில் வெளிநாட்டுத் தமிழர்கள் சரியான பங்களிப்பைச் செலுத்தி, வெற்றிக்கு வழி சமைப்போம்.

அட்டைப்படம்.
நிரபராதிகளாய் சரணடையும் பலஸ்தீனியர்கள். மிருகத்தனமாக இவர்கள் SHATILA முகாமில் படுகொலை செய்யப்பட்டார்கள்.

# அக்டோபர் புரட்சியும் இன்றைய சோவியத் யூனியனும்.

1917ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25ந் திகதி உலக சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நாள். அன்றுதான் உலகின் முதலாவது சோசலிசப் புரட்சி, லெனின் தலைமையில் ரஷ்யாவில் நடைபெற்று தொழிலாளர்கள் ஆட்சியை தம் கையில் பெற்றுக் கொண்ட நாள். புரட்சி என்பது ஒருவர் இஷ்டப் படியோ, அல்லது ஒப்பந்தங்களாலோ நடைமுறைப்படுத்தப் படுவதல்ல. அது இலட்சக் கணக்கான மக்களால் இனியும் பழைய முறைப்படி பொது அமைப்பு இருக்கக் கூடாது என்ற தீர்மானத்தால் எழுகின்றது, என்று லெனின் கூறினார்.

மேலும் மனிதன் நிம்மதியாக வாழ வேண்டும், அவன் தனது கலாச்சார ரீதியாகவோ, அல்லது பொருளாதார ரீதியாகவோ மற்றவனுக்கு இடைஞ்சல் அளிக்காமலும், மற்றவனால் கலாச்சார ரீதியாகவோ, அல்லது பொருளாதார ரீதியாகவோ பாதிக்கப்படாமலும் வாழவேண்டும் என்றும் கூறினார்

இக்கூற்றுகள் முதலாவது உலக யுத்தத்தின் நாலாவது ஆண்டு காலப்பகுதியிலேயே அதாவது 1917ம் ஆண்டிலே ரஷ்ய மக்கள் யாவராலும் உணர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆட்சியை தம் வசம் கொண்டு வந்தார்கள். இதைப் போன்ற புரட்சிகள் உலக அரங்கின் பல்வேறு நாடுகளில் காலத்துக்குக் காலம் நடைபெற்றதும், ரஷ்யப் புரட்சியின் வெற்றியை ஒன்றும் அடையவில்லை. உதாரணமாக 1776ம் ஆண்டின் அமெரிக்கப் புரட்சி, 1789ம் ஆண்டின் பிரெஞ்சுப் புரட்சி போன்றவை தொழிலாளர்களுக்கு சில சலுகைகள் கிடைக்க வழி கோலினவேயன்றி வேறொன்றையும் அதனால் அடைய முடியவில்லை.

ரஷ்யப் புரட்சி வெற்றியடைந்த போது, ரஷ்யாவின் பெரிய, சிறிய பேதமின்றி சகல தொழிற் பேட்டைகளும், காணிகள், வங்கிகள், இயற்கை வளங்கள் யாவும் பொது உடைமையாக்கப்பட்டன. நூற்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் வாழும் ரஷ்யாவில் அத் தேசிய இனங்களின் சனத் தொகை விகிதாசாரமின்றி, மொழி, மத வேறுபாடின்றி, ஆண், பெண் என்ற பாகுபாடின்றி எல்லோரும் சமன் என்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1917ம் ஆண்டு ரஷ்யாவில் சோசலிச அரசாங்கம் அமைக்கப்பட்டபோது, அதன் பொருளாதார நிலை 1913ம் ஆண்டில் அதாவது முதலாவது உலக மகாயுத்தம் தொடங்க முன்பிருந்த படு பயங்கரமான பொருளாதார நிலையிலும், கேவலமான நிலைக்கு உலகயுத்தத்தாலும் வெளிநாட்டு ஆக்ரமிப்பு முதலாளித்துவ சக்திகளாலும் தள்ளப்பட்டது. ஆயினும் 1940ம் ஆண்டளவில் ரஷ்ய மக்களின் கடுமையான உழைப்பால் முதலாவது உலக மகாயுத்தம் தொடங்க முன்பிருந்த பொருளாதார நிலைக்கு ரஷ்யா கொண்டுவரப்பட்டது. ஆனாலும் மீண்டும் இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது 1941ம் ஆண்டு யூன் மாதம் ரஷ்யா ஜேர்மனியால் தாக்கப்பட்டது. இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது, உலகின் வேறெந்த நாட்டையும் விட ரஷ்யாவே மோசமாகப் பாதிக்கப்பட்டது. யுத்தத்தில் ரஷ்ய நாட்டின் 3 இல் 1 பங்கு பொருளாதாரம் நாசப்படுத்தப்பட்டது. 2 கோடி உயிர்கள் அழிக்கப்பட்டது. ஆயினும் இதனால் ரஷ்ய மக்கள் தளர்வடையவில்லை. தமது நாட்டை சோசலிசப் பாதையில் முன்னெடுக்க வைராக்கியம் பூண்டனர். அதனால் இன்று ரஷ்யாவில் 1913ம் ஆண்டு பெறுமதியும்

# வெகுஜனப் போராட்டம் ....

இன்று நாம் கண்டும் கேட்டும் அறியக்கூடிய வகையில் இன்றைய உலகில், தேசிய விடுதலைப் போரட்டங்கள், வர்க்கப்போராட்டங்கள், ஏகாதிபத்திய, பாசிச முதலாளித்துவ அரசுகளுக்கெதிராக நடந்து கொண்டிருக்கின்றன. இந்தப் போராட்டத்தின் அடிப்படைத் தார்ப்பரியமானது அடக்குபவர்களும் அடக்கப்படுபவர்களும், நசுக்குபவர்களும் நசுக்கப்படுபவர்களும், தொழிலாலர்களும் ,தொழிலாலர்களின் உழைப்பை சுரண்டுபவர்களும் என்பதின் கீழ் அடங்கும்.

இன்று எம்மை அடக்கியொடுக்க முயன்று கொண்டிருக்கும் சிங்கள இனவாத பாசிச அரசிற்கு எதிராக அதன் பிடியிலிருந்து விடுதலை பெற வேண்டிய போராட்டத்திற்கு கட்டாயமான நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டுள்ளோம். இந்த எமது தமிழ் மக்களின் போராட்டத்தில் மீட்சி பெற மக்களின் வர்க்க உணர்வை ஆராய்ந்து விரைவுபடுத்த வேண்டியுள்ளது. வர்க்க உணர்வு மேம்பட்டு தெளிவான புரட்சிகர சித்தாந்தம் மக்கள் மத்தியில் உருவாகும்போது தான், மக்கள், போராட்டத்தில் தமது பங்கு என்ன என்று உணர்ச்சி மேம்பாடு வெளிப்படும். (இந்த சிந்தனையை மக்கள் மனதில் ஊட்டவும், அவர்களின் உணர்ச்சிகளுக்கு வடிகாலாகவும் அமையும் இயக்கம்தான் "வெகு ஜன மக்கள் இயக்கமாக"

இருக்கலாம் இருக்கமுடியும்) அந்தக் காலகட்டத்தில் அரசியல் ஞானம், சித்தாந்த தெளிவு என்பன இன்றியமையாததாகின்றது. இவற்றை அலட்சியமாக என்னும் நோக்குடையவர்களைக் கூட (பொதுவாக மக்களிடையே பிற்போக்கானவர்கள், அரசியல் உணர்வற்றவர்கள், இனவெறியாலோ, பணவெறியாலோ ஊறிப்போனவர்கள்.) புரட்சி சித்தாந்தத்தின் மூலம் போராட்டத்திற்கு தட்டியெழுப்புவது நமது தலையாய கடமையாக இருக்கின்றது. காரணம் நமது விடுதலையை நாம் தான் வென்றெடுக்க வேண்டும் என்பது எமது மக்களுக்குத் திடமான தீர்க்கமான தீர்மானமாக இருக்க வேண்டும். இன்று தமிழீழத்தில் நடைபெறும் போராட்டத்தில் சிங்கள ஏகாதிபத்திய அரசாங்கத்தால் நசுக்கப்படும் நாம், ஒரு பரஸ்பரமான போராட்டத்தை ஒழுங்கு முறைப் படுத்தி, புரட்சிகர பாதையில் துரித வளர்ச்சியை முன்னேற்றிச் செல்ல வேண்டும்.

"ஒழுங்கு முறையற்றத் தாக்குதல்கள் போராட்டத்தை பின்னடையச் செய்யுமேயன்றி வெற்றிக்கு வழி வகுக்காது" (லெனின்)

சிங்கள ஏகாதிபத்தியமெனும் போது, அதற்கு பின்னுவுள்ள ஏகாதிபத்திய உந்து சக்திகளையும் நாம் கவனமாக கருத்திற் கொண்டு, எதிரியின் பலத்தை ஆராய வேண்டும். காரணம் நமது ஒவ்வொரு தாக்குதலின் போதும், எதிரி தன்னை மென் மேலும் பலப்படுத்திக் கொள்கின்றான். லெனின் ரஸ்யப் போராட்டத்தில் "தாக்குதல்களை" நடத்தி பல முறை தோல்விகளைச் சந்தித்தார். பின்பே உணர்ந்து வலியுறுத்தினார்.

தொடர்ச்சி 42ம் பக்கத்தில்.

உற்பத்தி செய்யப்பட்டவை இன்று 2½ நாட்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

உலகிலேயே பெரிய நாடு ரஷ்யாவாகும். இது 2 கோடியே 24 லட்சம் சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்புடையது. இது உலக நில மேற்பரப்பின் 6 இல் 1 பங்கு ஆகும். ஐரோப்பாவின் அரைப் பங்கும், ஆசியாவின் 3 இல் 1 பங்கும் இதன் நிலப்பரப்பினுள் அடங்குகின்றது. இது வட தெற்காக 5 ஆயிரம் கிலோ மீற்றரும் கிழக்கு மேற்காக 10,000 கிலோ மீற்றரும் நீளமுடையது. இதன் கிழக்குப் பகுதியில் ஒரு நாள் உதயமாகும் போது, அதன் மேற்குப் பகுதியில் முதல் நாள் பின்னேரமாகிவிடும். உலகிலேயே ஆகக்கூடிய நாடுகளைத் தனது எல்லையாகக் கொண்ட நாடும் ரஷ்யாவே. இதன் எல்லைகளில் நோர்வே, பின்லண்ட், போலண்ட், செக்கோஸ்லாவாக்கியா, ஹங்கேரி, ருமேனியா, துருக்கி, ஈரான், ஆப்கானிஸ்தான், சீனா, மொங்கோலியா வடகொரியா ஆகிய 12 நாடுகள் உள்ளன. இந்நாட்டின் சராசரி காலநிலை விவசாயத்திற்கு உகந்ததல்லாத முற்றிலும் மோசமான காலநிலையாகும். கோடை காலத்தில் +50°C இலிருந்து +15°C வரை வேறுபடும். குளிர்காலத்தில் −10°C இலிருந்து −12°C வரை குறையக்கூடியது.

இந்நாட்டின் சனத்தொகை 1977ம்
ஆண்டின் கணக்கெடுப்பின் போது 25 கோடியே
80 இலட்சமாகும். இது சனத்தொகையில் சீன
வுக்கும், இந்தியாவிற்கும் அடுத்த படியாக
உள்ளது. இங்கு ஆண்களிலும் பார்க்க 1 கோடி
யே 80 இலட்சம் பெண்கள் அதிகமாக
உள்ளனர். இது இரண்டாவது உலக மகா
யுத்தத்தின் தாக்கமாகும். ஆயினும் 45 வயதுக்கு
குறைந்தவர்களில் ஆண், பெண் விகிதாசாரம்
சமனாகவே உள்ளது. இந்தியாவிலுள்ள மாகா
ணங்களைப் போன்று 15 சுயநிர்ணய உரிமை அங்கீ
கரிக்கப்பட்ட குடியரசுகள் இணைந்தே சோவி
யத் ஐக்கிய குடியரசாகும். ஆனால் இவை
இந்தியாவிலுள்ள மாகாணங்களைப் போலல்லாது
ரஷ்யாவிலிருந்து பிரிந்து தனிநாடாக செயல்
படக்கூடியவை. இப் 15 குடியரசுகளுள் 4,
1940ம் ஆண்டே ரஷ்யாவுடன் தாமாகவே
இணைந்தவை. இப் 15 குடியரசுகளுக்கும்
தனித் தனி அரசாங்கங்கள் உண்டு. இவை
யாவும் மொஸ்கோவிலுள்ள ஒரு மத்திய
அரசாங்கத்தால் (கமிட்டியால்) இணைக்கப்படுகின்
றன. ரஷ்யாவில் நூற்றுக்கும் மேற்பட்ட தேசிய இன
ங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றார்கள். அங்கு

89 மொழி பேசும் மக்கள் இருக்கின்றார்கள் கத்தோலிக்கம், இஸ்லாம், பௌத்தமதம் உட்பட 10க்கும் மேற்பட்ட மதங்களைச் சார்ந்தோர் இருக்கிறார்கள். பெரும்பாண்மை இனம் ரஷ்யர்களாகும். இவர்கள் மொத்த சனத்தொகையின் 54% ஆகும். சனத்தொகை 1000க்கும் குறைவான தேசிய இன மக்களும் அங்குண்டு. (உக்ரேனியன்ஸ்) ஆயினும் இவர்கள் இன, மத, மொழி வேறுபாடின்றி, ஆண், பெண் பேதமின்றி எல்லோரும் ஒரு தாய் மக்களாகவே நடத்தப்படுகின்றார்கள்.

இங்குள்ள உடமைகள் யாவும் இரு பிரிவுக்குள் ஆக்கப்படுகின்றன.

(1) தேசிய உடைமை (2) கூட்டுறவுப் பண்ணை உடைமை. கூட்டுறவுப்பண்ணை உடைமையில் ஒரு கிராமத்திலுள்ள விளைநிலங்கள் யாவும், கிராமத்து மக்கள் எல்லோருக்கும் சொந்தமாக்கப்பட்டு, எல்லோரும் ஒன்றாக விவசாயம் அல்லது கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு அதனால் வரும் பயனை முற்று முழுதாக அனுபவிப்பார்கள். இதைத்தவிர மற்றவையாவும் தேசிய உடைமையாகும். தனிமனிதன் தனது உடைமையாக ஒரு வீடு, சிறு தோட்டம்,

ஒரு கார் அதைத் தவிர அவனது அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியமானவற்றை வைத்திருக்கலாம். விவசாயி மாத்திரம் குறிப்பிட்ட அளவு விளை நிலம் தனது சொந்தமாக வைத்திருக்கலாம். ஒரு மனிதனின் உழைப்பால் இன்னுமொரு மனிதன் பயனைப் பெறுவது முற்றாகவே தடைசெய்யப்பட்டுள்ளது.

## கல்வி

சோவியத் குடியரசின் முதுகெலும்பாக மக்களே கணிக்கப்படுகின்றார்கள். இதனால் அவர்கள் கல்வியூட்டப்படுவது அரசின் முக்கிய கடமையாகிறது. அதனால் சோவியத்தில், ஆரம்ப கல்வியிலிருந்து உயர்தரக் கல்விவரை முற்றிலும் இலவசமாக அளிக்கப்படுகிறது. அதுமட்டுமின்றி மாணவர்களுக்கு அவர்களின் கல்வி நிலைக்கேற்ப மாதாந்த உதவிப்பணம் அரசினால் வழங்கப்படுகிறது. இதனால் 50% மக்கள் உயர்தரக் கல்வி அல்லது இரண்டாந்தரக் கல்வியை முடித்தவர்களாகவே உள்ளார்கள். தொழிலாளர்களில் 9% ஆனோர் உயர்தரக்கல்வி கற்றவர்கள். 70% ஆனோர் இரண்டாந்தரக் கல்வி முடித்தவர்கள் ஆகவே தொழிலாளர்களில் 21% ஆனோரே கல்வியறிவற்றவர்கள். இவ்விகிதாசாரம்

உலகின் வேறெந்த நாட்டின் முதலாளித்துவ நாடுகள் உட்பட படிப்பறிவற்ற தொழிலாள வர்க்கத்தினருடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாகும். உயர்கல்வி பெற்றவர்களில் ஆண் பெண் விகிதாசாரம் சமானதாகவே உள்ளது. மாணவர்கள் தொழிற்கல்வி பெற விரும்பினால், (TECHNICAL STUDIES) அவர்கள் விரும்பும் பயிற்சி நெறியும் இலவசமாகவே அளிக்கப்படுகின்றது. மாணவர்கள் கல்வி கற்றபின் வேலைவாய்ப்பு அவர்களுக்கு அவர்கள் சார்ந்த துறையிலேயே அளிக்கப்படுகிறது. மாணவர்கள் தாம் போதனா மொழியை தமது விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்யலாம். இங்கு 65 க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் உண்டு. இப்பல்கலைக்கழகங்கள் சோவியத் பிரஜைகளை மட்டுமன்றி உலகின் 130 நாடுகளைச் சேர்ந்த 50,000 மேற்பட்ட மாணவர்களுக்கும் வருடாந்தம் கல்வியறிவூட்டி வருகின்றது. அத்துடன் உடற்பயிற்சி, விளையாட்டுக்கள் போன்றவற்றையும் கட்டாயமாக எல்லா மாணவர்களுக்கும் ஊட்டி வருகின்றது. இதனால் தான் இன்று உலகின் முன்னணி விளையாட்டு வீரர்களை ரஷ்யா உருவாக்கி வருகிறது. ஒரு விளையாட்டின் மூலம் பணம் சம்பாதிப்பது முற்றாகத்தடை

செய்யப்பட்டுள்ளது. முதலாளித்துவ நாடுகளில் சில விளையாட்டுகளில் பெரும் வெற்றியினால் பல இலட்சம் டொலர்கள் ஒருவர் இலகுவாக ஈட்டக் கூடியதாயுள்ளது.

## தொழில்

தொழில் செய்வது சோவியத் பிரஜை ஒவ்வொருவரினதும் கடமையாகும். தேக ஆரோக்கியம் உடைய ஒவ்வொரு பிரஜையும் ஒன்றில் தொழில் செய்கின்றான், அல்லது படிக்கின்றான். வேலையில்லாத் திண்டாட்டம் என்ற சொல்லுக்கு அங்கு இடமில்லை. முதலாளித்துவ நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் 1975ம் ஆண்டின் புள்ளி விபரப்படி U.S.A. 70 இலட்சம் ஜேர்மனி 10 இலட்சம், பிரான்சு 15 இலட்சம், பிரிட்டன் 13 இலட்சம், இத்தாலி 12 இலட்சம் ஜப்பான் 13 இலட்சம், ஆகவுள்ளது. 1930ம் ஆண்டிலேயே வேலையில்லாத் திண்டாட்டம் இல்லாதொழிக்கப்பட்டுவிட்டது. காப்புறுதி, ஓய்வூதிய நிதி போன்றவை தொழிலாளரின் சம்பளத்திலிருந்து கழிக்கப்படுவதில்லை. தொழிலாளருக்குரிய சகல கொடுப்பனவுகளும் அரசினாலேயே செலுத்தப்படுகின்றது. பெண் தொழிலாளிக்கு மகப்பேற்றின் போது 112 நாள் முழுச்சம்பளத்துடன்

வீதம் விரும்பினால் இன்னும் ஒரு வருடம் சம்பளமற்ற லீவும் எடுக்கலாம். சாதாரணமாக ஆண் 60 வயதிலும் பெண் 55 வயதிலும் இளைப்பாறலாம். இவற்றுக்கும் சில விதி விலக்குகள் உண்டு. உதாரணமாக பல பிள்ளைகள் உடைய தாய் 50 வயதிலும் கடுமையான வேலை செய்யும் தொழிலாளர்கள், அதாவது நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் 45 வயது தொடக்கம் 53 வயதில் இளைப்பாறலாம். தொழிலாளர்களில் 45% பெண் தொழிலாளர்களாவார்கள். ஆண், பெண் பேதமின்றி சம சம்பளம். ஒவ்வொரு தொழிலாளியும் தான் எங்கு வேலை செய்ய வேண்டும், எங்கு வசிக்க வேண்டும் என்பது அவனது சுயவிருப்பம்.

## வாழ்க்கைத் தரம்

ஒரு தொழிலாளியின் சராசரிச் சம்பளம் 1950 ம் ஆண்டு 64.2 ரூபா ஆக இருந்தது. அது 1980 இல் 170 ரூபா ஆக அதிகரித்துள்ளது. இது மற்ற நாடுகளில் ஏற்பட்ட சம்பள உயர்வு போன்று பணவீக்கத்தால் ஏற்பட்டது அல்ல. சோவியத்தின் தேசிய வருமானம் ஆண்டு தோறும் அதிகரித்து வருவதால் அது நேரிடையாகவே மக்களின் சம்பள உயர்வின் மேலும் சென்றடைகிறது. சில முதலாளித்துவ

நாடுகளிலும் தேசிய வருமானம் அதிகரித்தாலும் அதன் சிறு பகுதியே தொழிலாளர்களைச் சென்றடைகிறது. பெரும்பகுதி சில பண முதலைகளிடம் சென்றடைகிறது. சோவியத்தில் வீட்டு வாடகை 1928ம் ஆண்டு இருந்த அளவிலேயே தற்போதும் உள்ளது. 99% ஆன உணவுப் பொருட்களின் விலை கடந்த 10 ஆண்டுகளில் ஒரு வித மாற்றமுமின்றி உள்ளது. ரஷ்யாவின் (METRO) பாதாள ரயில் சேவை 1935ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போது இருந்த பயணச் சீட்டின் கட்டணம் 1977ம் ஆண்டுவரை மாற்றமடையாமல் இருந்தது. அதுவும் 77ல் 2% உயர்வே ஏற்பட்டது. இக்கால கட்டத்தில் பல முதலாளித்துவ நாடுகளில் 100-200% உயர்வை ஏற்படுத்தியது. சிறிலங்காவில் கடந்த பத்து ஆண்டுகளில் 500%க்கும் அதிகமாக அதிகரித்துள்ளது. சோவியத் பிரஜை ஒவ்வொருவரினதும் வாழ்க்கைத்தரம் ஒவ்வோர் ஆண்டும் முன்னேறி வருகின்றது. இந்த முன்னேற்றத்தின் உச்சியிலேயே ரஷ்ய மக்கள் 1917ம் ஆண்டு புரட்சியின் மூலம் பெற்ற வெற்றியை பூர்த்தி செய்வார்கள். 1970ம் ஆண்டின் இருந்ததை விட 1980ம் ஆண்டு அத்தியாவசியப் பொருட்களின் விலை அமெரிக்காவில் 47%ம் ஜப்பானில் 89%ம்

மேற்கு ஜெர்மனியில் 40%-மும் பிரிட்டனில் 115%-
மும் பிரான்சில் 67%-மும் ஆக அதிகரித்துள்ளது.
ஆனால் ரஷ்யாவில் 3%-ஆல் குறைந்துள்ளது.
அது மட்டுமல்ல ஒவ்வோர் ஆண்டும் 9%-ஆல்
ஒரு தொழிலாளியின் சம்பளம் அதிகரித்து வரு
கிறது. பென்சன் பெறுபவர்களின், பென்சன் தொ
கையும் ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறது.
ஒவ்வொரு வருடமும் 30 இலட்சம் மக்கள்
புது வீடுகளுக்கு குடிபெயர்கிறார்கள். இவற்றில்
3ல் 2 பங்கு அரசாங்கத்தால் கட்டப்பட்ட
வீடுகள். இவற்றிற்கு முன்பணம் எதுவும் இல்லை.
வாடகை 1928ம் ஆண்டு இருந்த அதே தொகை.
3 இல் 1 பங்கினர் சொந்த வீட்டில் குடிபெயர்
கிறார்கள். இதற்குத் தேவையான காணி அரசினால்
இலவசமாக கொடுக்கப்படும். அதில் அவர் அமைப்
களுக்கு கூடாமலும் 5 அறைகளுக்கு மேற்படா
மலும் ஒரு வீட்டைக் கட்டலாம். வீடுகளி
ல் பாவிக்கும் தண்ணீர் (சுடுநீர் உட்பட) பாவிக்கும்
அளவைப் பொறுத்தல்ல 1 நபருக்கு மாதமொன்றிற்கு
6 F. எரிவாயு 1 நபருக்கு மாதமொன்றிற்கு 4 F
தொலைபேசி மாதமொன்றிற்கு 50 F எத்தனை
தொலை பேசி அழைப்புகளும் செய்யலாம்.

## மருத்துவம்

சகல மருத்துவ சேவைகளும் இலவசம் சனத்தொகை விகிதாசாரப்படி பார்க்கையில் இங்கு தான் அதிக அளவு ஆஸ்பத்திரி படுக்கைகள் உண்டு. எல்லா தொழிலாளர்களும் குறிப்பிட்ட காலத்திற்கொரு தடவை மருத்துவ கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படுவார்கள். உலக வைத்தியர்கள் 3 இல் 1 பங்கு வைத்தியர்கள் இங்கு இருக்கிறார்கள். எல்லா மட்டத்திலும் சகல மருத்துவ சேவைகளும் இலவசமாக அளிக்கப்படுகிறது.

## மதம்

ஒவ்வொரு பிரசைக்கும் மத சுதந்திரம் உண்டு. ஆயினும் சில நன்மைகளைக் கருத்திற் கொண்டு, மதம் அரசில் இருந்தும் பள்ளிக்கூடங்களிலிருந்தும் வேறாக்கப்பட்டுள்ளது. மதங்களை பின்பற்றுபவர்கள் அதை அரசுடனோ அல்லது பள்ளிக்கூடத்துடனோ தொடர்பு படுத்தாமல் அதைப் பின்பற்றலாம். சமயக் கல்வியை தமது பிள்ளைகளுக்கு பெற்றோர் விரும்பினால் தனிப்பட்ட முறையில் புகட்டலாம். பாடசாலையில் சமயக்கல்வி அறவே இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு கொள்கை

உலகிலுள்ள சகல நாடுகளுடனும்

ஒற்றுமையை பேணுவதன் மூலம் உலக அமைதியை க்காத்தல், மூன்றாம் மண்டல நாடுகளுக்கு உதவுதல் தேசிய விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவளித்தல்; போன்றவை ஆகும்.

இந்நாட்டின் வெளிநாட்டு உதவிகள் அவனவன் தேவையை அவனவன் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற அடிப்படை கொள்கையே அன்றி, முதலாளித்துவ நாடுகளின் உதவியைப் போன்று பொருளாதார சந்தைக்காகவும் அரண்டல்களுக்காகவும் அல்ல. உதாரணமாக சிறிலங்கா உலகின் இறப்பர் உற்பத்தியில் நான்காம் இடத்திலுள்ளது. ஆயினும் தனக்குத் தேவையான வாகன டயர்களை பலகாலம் இறக்குமதி செய்தே வந்துள்ளது. இதற்காக ருஷ்யாவின் உதவியால் களனியில் ஒரு டயர் தொழிற்சாலை கட்டப்பட்டு தனது டயர் தேவையை சிறிலங்கா தற்போது தானே பூர்த்தி செய்து வருகிறது. இதைப் போன்று இந்தியா, சீனா, மத்திய கிழக்கு உட்பட 117 நாடுகளில் பல திட்டங்களை உருவாக்கி அவர்களது தேவையை அவர்களே பூர்த்தி செய்ய வழிகோலியுள்ளது.

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு பிரஜையும் வாக்களிக்கும் உரிமை உண்டு. 21 வயதுக்கு மேற்பட்ட பிரஜை தேர்தலில் போட்டியிடலாம்.

தேர்தல் செலவுகள் எல்லாம் (வேட்பாளர்களின் செலவுகள் உட்பட) யாவும் அரசினால் செலுத்தப்படும். 1974ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட சோவியத்தின் மத்திய கமிட்டியில் 1517 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். இவர்களில் 421 பேர் அதாவது 28% சுயேச்சை வேட்பாளர்கள் 32% மானோர் பெண்கள், 20% மானோர் 30 வயதுக்குட்பட்டவர்கள். தெரிவு செய்யப்பட்ட 1517 உறுப்பினர்களுள் 498 பேர் தொழிலாளர்கள். 277 கூட்டுறவுப் பண்ணை விவசாயிகள், 77 எஞ்சினியர்கள், 142 கலை, விஞ்ஞான, கலாச்சார பிரிவுகளைச் சேர்ந்தவர்கள், 56 பேர் இராணுவத்தினர். 473 பேர் அரசு சேவையில் ஈடுபடுபவர்கள் ஆவார்கள். இம்மத்திய கமிட்டி சோவியத் பிரஜைகள் ஒவ்வொருவரும் சம உரிமையுடன், ஒவ்வொருவரும் முன்னேறுவதற்கு, சமசந்தர்ப்பங்களும் கொடுபட வேண்டும் என்ற கொள்கையுடன லெனின் கூறியது போல் ஒரு மனிதன் பொருளாதார ரீதியாகவோ அல்லது கலாச்சார ரீதியாகவோ மற்றவனுக்கு இடைஞ்சல் விளைவிக்காமலும் மற்றவனைப் பொருளாதார ரீதியாகவோ அல்லது கலாச்சார ரீதியாகவோ பாதிக்கபடாமல் வாழ வேண்டும் என்ற கூற்றுக்கு இணங்க செயற்பட்டு வருகின்றது.

ஆகவே அமையப் போகும் எமது தமிழீழத் தாயகம், சிங்கள அடக்குமுறை முதலாளித்துவவாதிகளிடமிருந்து, தமிழ் அடக்குமுறை முதலாளித்துவவாதிகளின் கைகளுக்கு மாறாமல், இன, மத, ஆண், பெண் பேதமற்ற சோசலிசத் தமிழ் ஈழம் பெற போராடுவோம்.

---

"புரட்சிகரப் போராட்டம் என்பது, அரச இயந்திரத்தின் மேல் கைவைப்பது அல்ல, அரச இயந்திரத்தை உடைத்து எறிவதாகும்." அதை உடைத்தெறியும் கால கட்டம் என்பது, எமது போராட்ட வளர்ச்சி, பரந்துபட்ட மக்களின் ஆதரவு, கால சூழ்நிலைகளுக்கேட்ப அமைந்து, எமது செயல் திட்டம் சரியான செயல் வடிவம் எடுக்கும் போதேயமையும். ஆனல் இக்காலகட்டம், எந்தத் துரிதகெதியில் போராட்ட வடிவம் எடுக்கும் என்பது மக்கள் கையிலேயே தங்கியுள்ளது. அதற்குத்தான் மக்களை அரசியற் அடிப்படையில் போராட்டத்திற்கு அணி வகுக்க வேண்டுமென வலி உறுத்துகின்றோம்.

போராட்டத்தின் தன்மையானது மக்கள் மனதில் திடமாக வேரூன்றி, எவ்வளவுக்கெவ்வளவு ஆழமாக உள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு விரிவாகவும் துணிவுடனும் மன உறுதியுடனும், அதிக முன்முயற்சியுடனும் செயல்பட்டால் தான் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படும். (மார்க்ஸ்) நமது போராட்டம் மக்கள் மனதில் பதிய மக்கள் போராட்டமாக மலர நமது இயக்கம் எடுத்துள்ள செயல் திட்டங்களும், முன்வைத்துள்ள கொள்கைத் திட்டங்களும் தமிழ் மக்கள் அறியாததல்ல.

# No Joke Reagan Wants War!

"My fellow Americans," began Ronald Reagan, warming up for his weekly radio chat. "I'm pleased to tell you today that I've signed legislation that will outlaw Russia forever. We begin bombing in five minutes." So said the man who has his finger on the button that can unleash 3,000-plus megatons of nuclear weaponry, enough to produce Hiroshima *276,000 times over*. And five minutes is just the time it takes for those Pershing 2 first-strike missiles to reach the Soviet Union from their launch sites in West Europe. It was all a "joke," the White House claimed. Soviet defense minister Marshal Ustinov isn't laughing. He recalls the 20 million Soviet citizens who died throwing back the last attempt to obliterate the homeland of the October Revolution.■


# SABRA SHATILA

செப்டெம்பர் 82ல் இறுதியில் இஸ்ரவேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட லெபனனின் தலைநகர் மேற்கு பெய்ரூட்டில் சப்ரா, சாட்டிலா என்ற இரண்டு பலஸ்தீனிய அகதிகள் முகாம்களில் வாழ்ந்த மக்கள் கிறிஸ்தவப் பலங்கிஸ்ட் (CHIRSTIAN PHALANGISTS) குழுக்களால் மனிதாபிமானமற்ற முறையில், ஆயிரக் கணக்கில் நிரபராதிகளாய் கொன்று குவிக்கப்பட்டனர். இஸ்ரவேலின் முழுமுழுதான ஒத்துழைப்புடன் இக்கொலைத்தனமான செயல் மேற்கொள்ளப்பட்டது.

இந்த முகாம்களில் நுழைந்த குழுக்கள் ஆண்களை பெண்களிலிருந்து வேறாக்கி, குடும்பங்களிலிருந்து பிரித்து, ஒரு வரிசையாக நிறுத்தி நிராயுதபாணிகளாக கொன்று குவித்தனர். பின்னர் பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் உட்பட அனைவரையும் கொலை செய்ததுடன் கண்ணில் தென்பட்ட அனைத்தின் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இஸ்ரவேலியர்களின் இராணுவ ஆலோசனையைப் பெறும் சிங்கள இனவாத அரசாங்கத்தின் இராணுவமும் சமீப காலங்களில் பொதுமக்களை கொன்று குவித்தது. வல்வெட்டித்துறை மனிதரில் பேரழிவுகளை ஏற்படுத்தியது. பஸ்ஸில் பிரயாணம் செய்த அப்பாவிகளை மனிதத்தன்மையின்றி சுட்டுப் பொசுக்கியது.

நாம் தமிழீழத்தின் கிராமங்களைச் சப்ரா, சாட்டிலா போன்று சுடுகாடாகாமல் காக்க மக்களை அணி திரட்டுவோம்.



அணு ஆயுதங்களுடன் ஒளித்து விளையாடும் அமெரிக்க ஜனாதிபதி.

HR8296.85

# 'It is true, indeed, that they can execute the body, but they cannot execute the idea which is bound to live'

